DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

CC. No. 74/2019

Prosecution witness – PW.9

| | | |
|---|---|---|
| Name | :திருமதி. சேசம்மாள் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present)
13.05.2024 – 02.10 PM
சாட்சியை நிலைய த.கா–246 அவர்கள் அடையாளம் காட்டினார்.

முதல் விசாரணை

1. எனக்கு சொந்த ஊர் விருதுநகர் மாவட்டம் மறைக்குளம் கிராமம். நான் கூலி வேலைக்கு சென்று வருகிறேன். கடந்த 2002ம் ஆண்டு சுகண்யா சேம்பருக்கு வேலைக்கு சென்றோம். தற்போது எந்த ஆண்டு நடைபெறுகிறது என்று எனக்குத் தெரியாது.

2. எங்கள் ஊரைச் சேர்ந்த 10 குடும்பங்கள் அங்கு வேலைக்கு சென்றோம். எங்களை கார்த்திக் என்பவர் வேலைக்காக அழைத்துச் சென்றார். எங்களால் வேலை சமயத்தில் ஊர்களுக்கு போக இயலாது. நாங்கள் 6 நாட்கள் வேலை செய்வோம். வேலை செய்யும் நேரம் சம்மந்தமாக எங்களுக்கு பிரச்சனை இருந்து வந்தது.

3. 6 நாட்கள் வேலை செய்வதற்கு எங்களுக்கு 500 ரூபாய் சம்பளம் கொடுப்பார்கள். அந்தப்பணம் எங்களுக்கு போதுமானதாக இல்லை. எங்களுக்கு முன்பணமாக ரூ.40,000/– கொடுத்திருந்தார்கள். அதற்கு எங்களுக்கு கொடுக்க வேண்டிய சம்பளத்தை வரவு வைத்துக் கொள்வார்கள்.

4. எங்களை வேலைக்கு அழைத்துச் சென்ற மேனேஜரை அடிக்கவும், பிரச்சனை ஏற்பட்டு அபிராமம் காவல்நிலையத்தில் இருந்து வந்து எங்களை விடுவித்தார்கள். ஆஜர் எதிரி தான் சுகண்யா சேம்பரின் உரிமையாளர் ஆவார். போலீசார் எங்களை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.